**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 06.03.2025

Case No. DOP.22/2023

P.W. 2

**திரு. A.P.பாலசிங்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

எதிர்மனுதாரருக்கு திருமணத்தின் போது போடப்பட்ட 35 பவுன் நகைகள் தற்போது என்னிடம் உள்ளது என்றால் 33 பவுன் நகைகள் உள்ளது. எதிர்மனுதாரர் தாம்பத்ய உறவுக்கு ஒப்புக் கொள்ளவில்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இருவரும் பிரிந்த போது நான் எந்த தேதியில் எங்கே சமாதானம் பேசச் சென்றேன் என்று என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றால் இல்லை. நான் தான் இருவரையும் பிரிப்பதற்காக மனுதாரரை வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. இருவருக்குமிடையே விவாகரத்து ஆக வேண்டுமென்பதற்காக நான் பொய்யான காரணங்களை கூறுகிறேன் என்றால் தவறு. எதிர்மனுதாரர் எப்போதும் மனுதாரர் பேச்சை கேட்டுத்தான் இருந்தார் என்றாலும் இந்த வழக்கிற்காக கேட்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.03.06 15:43:28 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**